# 9ஆவது

# சமூக அறிவியல்

# Winmeen Test Sheets

சமச்சீர் புத்தகத்தின் ஒவ்வொரு வரியில் இருந்தும் எடுக்கப்பட்ட கேள்விகள்

முற்றிலும் TNPSC பாடத்திட்டத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வினாக்கள்

பாடவாரியாக விரைவான திருப்புதலுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது

23 பாடங்கள் 1300+ கேள்விகள்

winmeen

**Winmeen E Learning**

**Email: admin@winmeen.com**

**Mobile: 6385150514**

# அர்ப்பணிப்பு

அனைத்து போட்டித்தேர்வுகளுக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த புத்தகத்தை போட்டித்தேர்வுக்கு பயிலும் மாணவர்களுக்காக அர்ப்பணிக்கிறோம்.

கொடுக்கப்பட்ட வினாக்களைப் பயிற்சி செய்து, நீங்கள் இந்த புத்தகத்தின் மூலம் போட்டித்தேர்வில் மிகப் பெரிய வெற்றியடைய வாழ்த்துக்கள்.

| வ.எண் | பொருளடக்கம் | வினாக்கள் | பக்க எண் |
|---|---|---|---|
| | **வரலாறு** | | |
| 1 | மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும், வரலாற்றுக்கு முந்தைய காலம் | 117 | 1 |
| 2 | பண்டைய நாகரிகங்கள் – சிந்துவெளி நாகரிகம் | 46 | 12 |
| 3 | தொடக்ககாலத் தமிழ் சமூகமும் பண்பாடும் | 80 | 16 |
| 4 | அறிவு மலர்ச்சியும் சமூக–அரசியல் மாற்றங்களும் | 90 | 23 |
| 5 | இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் | 94 | 30 |
| | **குடிமையியல்** | | |
| 6 | அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி | 36 | 38 |
| 7 | தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் | 31 | 42 |
| 8 | மனித உரிமைகள் | 73 | 45 |
| 9 | அரசாங்கங்களின் வகைகள் | 37 | 52 |
| 10 | உள்ளாட்சி அமைப்புகள் | 46 | 56 |
| 11 | சாலை பாதுகாப்பு | 25 | 60 |
| | **புவியியல்** | | |
| 12 | நிலக்கோளம் – I புவி அகச்செயல்பாடுகள் | 70 | 62 |
| 13 | நிலக்கோளம் – II புவி புறச்செயல்பாடுகள் | 100 | 68 |
| 14 | வளிமண்டலம் | 73 | 76 |
| 15 | நீர்க்கோளம் | 88 | 85 |
| 16 | உயிர்க்கோளம் | 40 | 92 |
| 17 | மனிதனும் சுற்றுச் சூழலும் | 73 | 98 |
| 18 | பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல் | 23 | 104 |
| | **பொருளியல்** | | |
| 19 | மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு அளவீடு மற்றும் நிலைத்தன்மை | 50 | 106 |
| 20 | இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு | 29 | 111 |
| 21 | பணம் மற்றும் கடன் | 53 | 114 |
| 22 | தமிழக மக்களும் வேளாண்மையும் | 29 | 119 |
| 23 | இடம்பெயர்தல் | 31 | 122 |
| | **Answer Key** | 1335 | 125–128 |

# Winmeen Self Study Course

- Online Coaching for Tnpsc Group 1, 2, 4, VAO & All TN Govt Exams.
- இன்டர்வியூ அல்லாத குரூப் 2ஏ & குரூப் 4, தேர்வுகளில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற இந்த பயிற்சி மிகவும் பயனளிக்கும்.
- Samacheer Lesson Wise Daily Videos + Daily Online Test + Test Pdf With Explanation
- Life Time Subscription - Fees : 5000 Rs
- Lesson By Lesson Online Test + Complete Book Back Questions + Previously Asked One liners.
- Attend Test Online and Get Answer Key With Explanation
- Are you Ready to Spend Minimum 6 months to crack Tnpsc Exams? - Join Fast.
- Contact : +91 6385150514

## 9th Social Science Lesson 1 Questions in Tamil - வரலாறு

## 1] மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும், வரலாற்றுக்கு முந்தைய காலம்

1. மனிதனால் உருவாக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட ஒரு பொருளோ அல்லது கருவியோ _________ என்று அழைக்கப்படுகிறது.

A) தொல்லியல்

B) அறிவாற்றல்

C) புதைபடிவங்கள்

D) செய்பொருள்

2. தொல்பொருள்களை ஆராய்ந்து, விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயும் இயல்

A) தொல்லியல்

B) தொல்மானுடவியல்

C) மண்ணடுக்கியல்

D) பரிணாமவியல்

3. மனிதர்களின் மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளும் இயல்

A) தொல்லியல்

B) தொல்மானுடவியல்

C) மண்ணடுக்கியல்

D) பரிணாமவியல்

4. புவி ___________ ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது.

A) 4.5 மில்லியன்

B) 4.54 பில்லியன்

C) 5.4 மில்லியன்

D) 5.45 பில்லியன்

5. கூற்று 1: தொல்பழங்கால மக்கள் மானுடப் படைப்பாற்றலின் முன்னோடிகள்.

கூற்று 2: புவியின் நீண்ட நெடிய வரலாற்றை நிலவியல் ஆய்வாளர்கள் நெடுங்காலம், காலம், ஊழி என்று பிரிக்கிறார்கள்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

6. நுண்ணுயிரிகளின் வடிவில் உயிர்கள் தோன்றியதற்கான சான்றுகள் ____________ ஆண்டுகளுக்கு முன் காணப்படுகின்றன.

A) 2.5 பில்லியன்

B) 2.5 மில்லியன்

C) 3.5 பில்லியன்

D) 3.5 மில்லியன்

7. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. சுமார் 600 முதல் 542 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய தொல்லுயிரூழியில் பல செல் உயிரினங்கள் முதலில் தோன்றின.

2. பழந்தொல்லுயிரூழியில் மீன்களும், ஊர்வனவும், பல்வேறு தாவரங்களும் தோன்றின.

3. இடை தொல்லுயிரூழி காலகட்டத்தில் டைனோசர்கள் வாழ்ந்தன.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

8. ஆஸ்ட்ரோலாபித்திஸைன் என்பதற்கு ____________ என்று பொருள்.

A) மேற்கத்திய மனிதக் குரங்கு

B) கிழக்கிந்திய மனிதக் குரங்கு

C) தெற்கத்திய மனிதக் குரங்கு

D) வடக்கத்திய மனிதக் குரங்கு

9. கூற்று 1: ஆஸ்ட்ரோலாபித்திஸைன்கள் என்ற குரங்கினத்திலிருந்து நவீன மனித இனம் தோன்றியது.

கூற்று 2: இன்று அழிந்துபோய்விட்ட இந்த ஆஸ்ட்ரோலாபித்திஸைன் இனம் மனிதனுக்கு மிக நெருங்கிய உறவுடைய இனமாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

10. வரலாறு எழுதுவது பண்டைய __________காலத்தில் தொடங்கியது.

A) ரோமானியர்கள்

B) கிரேக்கர்கள்

C) ஆங்கிலேயர்கள்

D) சீனர்கள்

11. வரலாற்றின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?

A) ஆர்க்கிமிடிஸ்

B) அரிஸ்டாட்டில்

C) ஹெரோடோடஸ்

D) வாஸ்கோடாகாமா

12. ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலம் என்பது __________ நூற்றாண்டுகள் ஆகும்.

A) பொ.ஆ. 13 – 14

B) பொ.ஆ. 14 – 15

C) பொ.ஆ. 15 – 16

D) பொ.ஆ. 16 – 17

13. மனிதர்களின் தோற்றம் குறித்த அறிவியல் பூர்வமான ஆய்வுகள் கீழ்க்கண்ட எந்த காரணிகளால் சாத்தியமாகின?

1. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பிறகு ஏற்பட்ட தொல்பொருள் சேகரிப்பின் மீதான ஆர்வம் மற்றும் அருங்காட்சியகங்கள் திறக்கப்பட்டமை
2. பாறை அடுக்கியல், நிலவியல் சார்ந்த கருத்துகள் ஆகியவற்றின் வளர்ச்சி
3. உயிரியல் பரிணாமம் குறித்த டார்வினின் கொள்கை
4. தொடக்க கால எழுத்துகளை வாசிக்கத் தொடங்கியமை
A) அனைத்தும் சரி
B) 1, 3, 4 சரி
C) 2, 3, 4 சரி
D) 1, 2, 4 சரி

14. இயற்கை மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளால் உருவான பாறை மற்றும் மண் அடுக்குகளின் தோற்றம், தன்மை, உறவுமுறைகள் குறித்து ஆராய்வது
A) பாறையியல்
B) மண்ணடுக்கியல்
C) புவியியல்
D) தொல்லியல்

15. என்னிகால்டி–நன்னா அருங்காட்சியகம் மெசபடோமியாவில் _________ ஆண்டு அமைக்கப்பட்டது.
A) பொ.ஆ.மு. 420
B) பொ.ஆ.மு 480
C) பொ.ஆ.மு 530
D) பொ.ஆ.மு 580

16. மிகப் பழமையான இயங்கிக் கொண்டிருக்கும் அருங்காட்சியகமான கேபிடோலைன் ____________ ஆண்டு அமைக்கப்பட்டது.
A) பொ.ஆ 530
B) பொ.ஆ. 1280
C) பொ.ஆ. 1471
D) பொ.ஆ. 1677

17. உலகின் மிகப் பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகமான ஆஷ்மோலியன் __________ ஆண்டு உருவாக்கப்பட்டதாகும்.
A) பொ.ஆ. 1520
B) பொ.ஆ. 1586
C) பொ.ஆ. 1655
D) பொ.ஆ. 1677

18. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. உயிரியல் பரிணாம கொள்கை – என்னிகால்டி
2. இயற்கைத் தேர்வு மற்றும் தகவமைப்பு – சார்லஸ் டார்வின்
A) இரண்டும் சரி
B) 1 மட்டும் சரி
C) 2 மட்டும் சரி
D) இரண்டும் தவறு

19. சரியான இணையைத் தேர்ந்தெடு (சார்லஸ் டார்வின் நூல்கள் – வெளியிடப்பட்ட ஆண்டு)
1. உயிரினங்களின் தோற்றம் குறித்து – 1859
2. மனிதனின் தோற்றம் – 1871
A) இரண்டும் சரி
B) 1 மட்டும் சரி
C) 2 மட்டும் சரி
D) இரண்டும் தவறு

20. கூற்று 1: தங்களது சூழ்நிலைக்கு சிறந்த முறையில் தகவமைத்துக் கொள்ளும் உயிரினங்கள் பிழைத்து, அதிகமாக இனப்பெருக்கம் செய்து பல்கிப் பெருகும் செயல்முறை இயற்கைத் தேர்வு எனப்படும்.
கூற்று 2: தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும் என்பது அடுத்தடுத்த தலைமுறைகளில் தனது சந்ததியை அதிக எண்ணிக்கையில் விட்டுச் செல்லும் ஓர் இனம் பிழைத்து நீண்டு வாழ்வதை குறிக்கிறது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

21. கடந்த காலத்தில் வாழ்ந்த விலங்குகள், தாவரங்களின் எச்சங்கள், தடங்கள், அடையாளங்கள் அப்படியே பாதுகாக்கப்பட்டிருப்பது ____________ எனப்படும்.
A) உயிரிய அடையாளங்கள்
B) உயிரிய கழிவுகள்
C) உயிரியல் எச்சங்கள்
D) புதைப்படிவங்கள்

22. __________ காரணமாக விலங்கின் எலும்புகள் புதைப்படிவங்களாக பாதுகாக்கப்படுகின்றன.
A) படிகமாக்கல்
B) படியவைத்தல்
C) கனிமமாக்கல்
D) உறையவைத்தல்

23. மூன்று காலகட்ட முறை அல்லது முக்காலக் கொள்கையை முன்மொழிந்தவர்
A) ஜே.ஜே. தாம்சன்
B) சி.ஜே. தாம்சன்
C) என்னிகால்டி

24. ____________ நூற்றாண்டிலிருந்து அறிவியல் உத்திகளைப் பயன்படுத்தியும் முறையான ஆய்வுகளை மேற்கொண்டும் அறிஞர்கள் தொல்பழங்காலம் மனிதகுலத்தின் தோற்றம், பண்டைய நாகரிகங்கள் ஆகியன குறித்து ஆய்வுகள் செய்தனர்.
A) 17
B) 18
C) 19
D) 20

winmeen.com

25. கூற்று 1: எழுத்து முறையின் தோற்றம் மனித வரலாற்றின் மிக முக்கியமான திருப்புமுனையாகும்.
கூற்று 2: எழுத்துமுறை அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் தொல்பழங்காலம் என்று குறிப்பிடப்படுகிறது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

26. கூற்று 1: மனிதர்களுடன் சிம்பன்சி, கொரில்லா, உராங்உட்டான் ஆகிய உயிரினங்களை கிரேட் ஏப்ஸ் என அழைக்கப்படும் பெருங்குரங்குகள் வகை என குறிப்பிடுகின்றனர்.
கூற்று 2: கொரில்லா மரபணு ரீதியாக மனிதர்களுக்கு மிக நெருக்கமானது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

27. சிம்பன்சி இனத்தின் மரபணுவை ஆய்வு செய்ததில் அதன் பண்புகள் மனித இனத்துடன் __________ சதவீதம் ஒத்துள்ளன.
A) 96
B) 97
C) 98
D) 99

28. மனிதர்களின் மூதாதையர்கள் __________ என்று அழைக்கப்படுகின்றனர்.
A) ஹோமினிட்
B) ஹோமினின்
C) ஹோமோ ஹெபிலிஸ்
D) ஹோமோ சேப்பியன்ஸ்

29. ஹோமோனின்கள் இனம் சுமார் ____________ ஆண்டுகளுக்கு முன் தோன்றினர்.
A) 8 முதல் 6 பில்லியன்
B) 7 முதல் 5 பில்லியன்
C) 8 முதல் 6 மில்லியன்
D) 7 முதல் 5 மில்லியன்

30. ஆப்பிரிக்காவின் ____________ பள்ளத்தாக்கில் தொல்பழங்காலம் குறித்த சான்றுகள் பல இடங்களில் கிடைத்துள்ளன.
A) ஓல்டுவாய் பள்ளத்தாக்கு
B) லேடோலி பள்ளத்தாக்கு
C) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு
D) டாங் பள்ளத்தாக்கு

31. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (ஹோமினிட்)
1. நவீன மற்றும் அழிந்து போன அனைத்து பெருங்குரங்கு இனங்களும் (கிரேட் ஏப்ஸ்) ஹோமினிட் என்று அழைக்கப்படுகின்றன.
2. இது மனிதர்களையும் உள்ளடக்கிய வகையாகும்.
A) இரண்டும் சரி
B) 1 மட்டும் சரி
C) 2 மட்டும் சரி
D) இரண்டும் தவறு

32. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.(ஹோமினின்)
1. ஹோமினின் எனப்படும் விலங்கியல் பழங்குடி இனம் மனித மூதாதையர்களின் உறவினர்களையும் அதன் தொடர்புடைய நவீன மனிதர்களையும் (ஹோமோ செப்பியன்ஸ்) குறிக்கும்.
2. இதில் நியாண்டர்தால் இனம், ஹோமோ எரக்டஸ், ஹோமோ ஹெபிலிஸ், ஆஸ்ட்ரலோபித்திசைங்கள் ஆகியன அடங்கும்.
3. இப்பழங்குடி இனத்தில் மனித இனம் மட்டுமே இன்றளவும் வாழ்கின்றது.
A) 1, 2 சரி
B) 2, 3 சரி
C) 1, 3 சரி
D) அனைத்தும் சரி

33. முதன்முதலில் கருவிகள் செய்த மனித மூதாதையர் இனம்
A) நியாண்டர்தால்
B) ஹோமோ ஹெலிலிஸ்
C) ஹோமோ எரக்டஸ்
D) ஆஸ்ட்ரலோபித்திஸ்

34. ___________ இனம் கைக்கோடரிகளைச் செய்தது.
A) நியாண்டர்தால்
B) ஹோமோ ஹெலிலிஸ்
C) ஹோமோ எரக்டஸ்
D) ஆஸ்ட்ரலோபித்திஸ்

35. உடற்கூறு ரீதியாக நவீன மனிதர்கள் என்றழைக்கப்படுபவர்கள்
A) ஹோமோ சேப்பியன்ஸ்
B) ஹோமோ ஹெலிலிஸ்
C) ஹோமோ எரக்டஸ்
D) ஆஸ்ட்ரலோபித்திஸ்

36. நவீன மனிதர்கள் சுமார் _________ ஆண்டுகளுக்கு முன் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் தொடர் இடப்பெயர்வால் பரவியதாக நம்பப்படுகிறது.
A) 10,000
B) 25,000
C) 40,000
D) 60,000

37. கென்யாவின் லோமிக்குவி என்ற இடத்தில் கிடைத்துள்ள தொடக்ககாலக் கருவிகள் __________ ஆண்டுகள் முற்பட்டவை.
A) 1.5 மில்லியன்
B) 2.2 மில்லியன்

C) 3.3 மில்லியன்
D) 4.3 மில்லியன்
38. ஆப்பிரிக்காவின் ஓல்டுவாய் மலையிடுக்கில் கிடைத்துள்ள ஓல்டோவான் கருவிகள் __________ ஆண்டுகள் முற்பட்டவை.
A) 3 முதல் 3.4 மில்லியன்
B) 4 முதல் 4.5 மில்லியன்
C) 2 முதல் 2.6 மில்லியன்
D) 2 முதல் 3.6 மில்லியன்
39. கீழ்க்கண்ட எந்த மனித மூதாதையர்களின் பண்பாடு கீழ்ப் பழங்காலப் பண்பாடு என்று குறிக்கப்படுகிறது?
1. ஹோமோ சேப்பியன்ஸ் 2. நியாண்டர்தால்
3. ஹோமோ ஹெபிலிஸ் 4. ஹோமோ எரக்டஸ்
A) 1, 2
B) 2, 3
C) 1, 4
D) 3, 4
40. ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள மனித மூதாதையர்களின் கைக்கோடரிகள் __________ ஆண்டுகள் பழமையானவை.
A) 1.5 மில்லியன்
B) 1.8 மில்லியன்
C) 1.5 பில்லியன்
D) 1.8 பில்லியன்
41. கூற்று 1: இருமுகக் கருவிகள் சமபக்க உருவ அமைப்பைப் பெற்றுள்ளன.
கூற்று 2: இருபுறமும் செதுக்கப்பட்டதால் இக்கருவிகளுக்கு இப்பெயர் இடப்பட்டது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
42. அச்சூலியன் கருவிகள் என்று அழைக்கப்படுபவை
A) ஈட்டி
B) பாறை
C) கைக்கோடரி
D) மண்வெட்டி
43. அச்சூலியன் வகைக் கைக்கோடரிகள் முதன்முதலில் __________ நாட்டில் கண்டெடுக்கப்பட்டன.
A) இத்தாலி
B) கனடா
C) ரஷ்யா
D) பிரான்ஸ்
44. இந்தியாவில் அச்சூலியன் கருவிகள் கிடைத்துள்ள இடங்கள் எவை?
1. இசாம்பூர் – கர்நாடகா
2. பிம்பெத்கா – மத்திய பிரதேசம்
3. சென்னைக்கு அருகில்
4. உத்திரபிரதேசம்
A) அனைத்தும்
B) 2, 3, 4
C) 1, 2, 3
D) 1, 3, 4
45. பெரிய கற்பாளத்திலிருந்து அல்லது கருங்கல்லில் இருந்து உடைத்து எடுக்கப்பட்ட ஒரு சிறு கற்துண்டு __________ எனப்படும்.
A) மூலக் கற்கள்
B) கருக்கல்
C) செதில்
D) அச்சூலியன்
46. __________ என்பது ஒரு கல்லின் முதன்மைப் பாளம் ஆகும்.
A) மூலக் கற்கள்
B) கருக்கல்
C) செதில்
D) அச்சூலியன்
47. __________ என்பவை கற்கருவிகள் செய்யப்பயன்படும் கற்கள் ஆகும்.
A) மூலக் கற்கள்
B) கருக்கல்
C) செதில்
D) அச்சூலியன்
48. உடற்கூறியல் ரீதியாக நவீன மனிதர்கள் சுமார் __________ ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக கூறப்படுகிறது.
A) 1 லட்சம்
B) 2 லட்சம்
C) 3 லட்சம்
D) 4 லட்சம்
49. கூற்று 1: தற்காலத்திற்கு சுமார் 3,98,000 ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவின் கற்கருவித் தொழில்நுட்பத்தில் மேலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.
கூற்று 2: கற்கருவித் தொழில்நுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்ந்த காலகட்டத்தில் ஹோமோ எரக்டஸ் இனம் வாழ்ந்து வந்தது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
50. இடைப் பழங்கற்காலப் பண்பாட்டு கருவிகள் கீழ்க்கண்ட எந்தப் பகுதிகளில் காணப்படுகின்றன?
1. ஆப்பிரிக்கா 2. ஐரோப்பா
3. வட அமெரிக்கா 4. மேற்கு ஆசியா
5. மத்திய ஆசியா
A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 1, 3, 4

D) 1, 4, 5

51. லெவலாய்சியன் வகைக் கருவிகள் முதலில் கண்டெடுக்கப்பட்ட நாடு

A) கனடா

B) இங்கிலாந்து

C) பிரான்ஸ்

D) ஜெர்மனி

52. தற்காலத்திற்கு முன் 2,83,000 முதல் 1,98,000 ஆண்டுகளுக்கு இடையில் ஐரோப்பாவிலும் ஆசியாவின் மேற்குப் பகுதியிலும் __________ பண்பாடு உருவானது.

A) கீழ் பழங்கற்கால பண்பாடு

B) இடை பழங்கற்கால பண்பாடு

C) மேல் பழங்கற்கால பண்பாடு

D) தொல்பழங்கற்கால பண்பாடு

53. இடைப் பழங்கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் இனம் ___________ என்று அழைக்கப்படுகிறது.

A) நியாண்டர்தால்

B) ஹோமோ ஹெலிலிஸ்

C) ஹோமோ எரக்டஸ்

D) ஆஸ்ட்ரலோபித்திஸ்

54. கூற்று 1: இடைப் பழங்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து வந்த பண்பாடு, மேல் பழங்கற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

கூற்று 2: மேல் பழங்கற்கால பண்பாட்டு மக்கள் சிலிகா அதிகமுள்ள பல்வேறு கல் வகைகளைக் கருவிகள் செய்யப் பயன்படுத்தினார்கள்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

55. ____________காலக்கட்டத்தில் நுண்கற்கருவிகள் எனப்படும் குறுங் கற்கருவிகளும் பயன்பாட்டிற்கு வந்தன.

A) கீழ் பழங்கற்கால பண்பாடு

B) இடை பழங்கற்கால பண்பாடு

C) மேல் பழங்கற்கால பண்பாடு

D) தொல்பழங்கற்கால பண்பாடு

56. மனித பரிணாம வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய முதல் நவீன மனிதர்கள் __________ ஆண்டுகளுக்கு முன்னர், முதன்முதலில் சப்–சஹாரா பகுதி என்றழைக்கப்படும் ஆப்பிரிக்காவின் சஹாராவிற்கு தெற்குபகுதியில் தோன்றினர்.

A) 2,00,000

B) 2,50,000

C) 3,00,000

D) 3,50,000

57. நவீன மனிதர்கள் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவிய காலகட்டத்தில் ___________ ல் குரோ–மக்னான் என்றழைக்கப்படும் மனிதர்கள் வாழ்ந்தார்கள்.

A) ஆப்பிரிக்கா

B) வட அமெரிக்கா

C) தென் அமெரிக்கா

D) ஐரோப்பா

58. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு. (மேல் பழங்கற்காலப் பண்பாடு)

A) கருவிகளையும் கலைப்பொருட்களையும் செய்யக் கொம்புகளும் தந்தங்களும் பயன்படுத்தப்பட்டன.

B) இக்கால மக்கள் ஆடைகளை அணியவில்லை.

C) சமைத்த உணவை உண்டனர்.

D) இறந்தவர்கள் மார்பின் மீது கைகளை வைத்த நிலையில் புதைக்கப்பட்டார்கள்.

59. வீனஸ் என்றழைக்கப்படும் கல்லிலும் எலும்பிலும் செதுக்கப்பட்ட பெண் தெய்வச் சிற்பங்கள் ______________ பகுதிகளில் உருவாக்கப்பட்டன.

A) வட அமெரிக்கா, ஐரோப்பா

B) ஆசியா, ஆப்பிரிக்கா

C) ஐரோப்பா, ஆசியா

D) ஆசியா, வட அமெரிக்கா

60. மேல் பழங்கற்காலப் பண்பாடு __________ ஆண்டுகளுக்கு முன் தோன்றியது.

A) 20,000

B) 30,000

C) 50,000

D) 60,000

61. பனிக்காலம் என்பது _________ ஆண்டுகளுக்கு முன் நிலவிய காலமாகும்.

A) 4,000

B) 5,000

C) 6,000

D) 8,000

62. லாஸ்கா பாறை ஓவியங்கள் _________ ஆண்டுகள் பழமையானவை.

A) 15,000

B) 16,000

C) 17,000

D) 18,000

63. கூற்று 1: பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலப் பண்பாடு இடைக்கற்காலம் என்று அறியப்படுகிறது.

கூற்று 2: இக்காலக்கட்டத்தில் மக்கள் பெரும்பாலும் மைக்ரோலித்திக் என்று சொல்லப்படும் சிறு நுண்கருவிகளைப் பயன்படுத்தினர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

64. இடைக்கற்கால மக்கள் சுமார் ___________ அளவிற்கும் குறைவான அளவுள்ள சிறு சிறு செய்பொருள்களை உருவாக்கினர்.

A) 3 மி.மீ

B) 3 செ.மீ

C) 5 மி.மீ

D) 5 செ.மீ

65. கூற்று 1: இடைக்கற்கால மக்கள் பிறைவடிவ, முக்கோணம் சரிவகம் போன்ற கணித வடிவியல் அடிப்படையிலான கருவிகளையும் செய்தனர்.

கூற்று 2: இடைக்கற்கால மக்கள் கூர்முனைகள், சுரண்டும் கருவி, அம்பு முனைகள் ஆகியவற்றைச் செய்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

66. வடமேற்கு ஐரோப்பாவில், இடைக்கற்கால மக்கள் ___________ ஆண்டுகளுக்கு முன் தோன்றினார்கள்.

A) 2000 முதல் 5000

B) 5000 முதல் 7000

C) 7000 முதல் 10000

D) 10000 முதல் 5000

67. இடைக்கற்காலப் பண்பாடு இந்தியாவில் _____________ ஆண்டு வாக்கில் தோன்றியது.

A) பொ.ஆ.மு 5000

B) பொ.ஆ.மு 7000

C) பொ.ஆ.மு 10000

D) பொ.ஆ.மு 15000

68. வேளாண்மை, விலங்குகளைப் பழக்குதல் ஆகியவை ___________காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

A) கீழ் பழங்கற்கால பண்பாடு

B) இடை பழங்கற்கால பண்பாடு

C) மேல் பழங்கற்கால பண்பாடு

D) புதிய கற்காலப் பண்பாடு

69. கூற்று 1: வளமான பிறை நிலப்பகுதி என்று அழைக்கப்படும் எகிப்து மற்றும் மெசபடோமியா, சிந்துவெளி, கங்கை சமவெளி, சீனாவின் செழுமையான பகுதிகள் ஆகியனவற்றில் புதிய கற்காலத்துக்கான தொடக்கக் காலச் சான்றுகள் காணப்படுகின்றன.

கூற்று 2: சுமார் பொ.ஆ.மு 10000லிருந்து பொ.ஆ.மு 5000 க்குள் இப்பகுதிகளில் வேளாண்மை நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

70. கீழ்க்கண்டவற்றுள் 'பிறை நிலப்பகுதி'யில் அடங்குபவை எவை?

1. எகிப்து 2. இஸ்ரேல்–பாலஸ்தீனம்

3. ஈரான் 4. ஈராக்

A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 2, 3, 4

D) 1, 2, 4

71. ____________ ஆண்டுகளுக்கு முன்பாக இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்கு பாகத்தில் (பாகிஸ்தான்) உள்ள மெஹர்காரில் கோதுமையும் பார்லியும் பயிரிடப்பட்டன.

A) பொ.ஆ.மு 5000

B) பொ.ஆ.மு 6000

C) பொ.ஆ.மு 7000

D) பொ.ஆ.மு 8000

72. செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் ____________ ஆண்டுகளுக்கு முன்னர் தென்மேற்கு ஆசியாவில் பழக்கப்படுத்தப்பட்டன.

A) பொ.ஆ.மு 6000

B) பொ.ஆ.மு 8000

C) பொ.ஆ.மு 10000

D) பொ.ஆ.மு 12000

73. ___________ நாகரிகத்தில் நிலத்தை உழுவதற்கு காளைகள் பயன்படுத்தப்பட்டன.

A) சிந்துவெளி நாகரிகம்

B) சீன நாகரிகம்

C) சுமேரிய நாகரிகம்

D) மெசபடோமிய நாகரிகம்

74. பொருத்துக. (பண்டைய தமிழகத்தின் பண்பாடுகள்)

1. பழங்கற்காலம் – i) 20,00,000 ஆண்டுகள் முன்பு முதல் பொ.ஆ.மு. 8000 வரை

2. இடைக் கற்காலம் – ii) பொ.ஆ.மு. 8000 முதல் பொ.ஆ.மு 1300 வரை

3. புதியகற்காலம் – iii) பொ.ஆ.மு. 2000 முதல் பொ.ஆ.மு 1000 வரை

4. இரும்புக் காலம் – iv) பொ.ஆ.மு 1300 முதல் பொ.ஆ.மு 500 வரை

5. பண்டைய வரலாற்று காலம் – v) பொ.ஆ.மு.300 முதல் பொ.ஆ.300 வரை

A) ii i iii iv v

B) iii i iv ii i

C) v iv iii ii i

D) i ii iii iv v

75. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (பண்டைய தமிழகத்தில் பழங்கற்கால பயன்பாட்டுக் கூறுகள்)

1. கைக்கோடரி, வெட்டுக்கத்தி

2. வேட்டையாடுதல்
3. உணவு சேகரித்தல்
A) அனைத்தும் சரி
B) 2, 3 சரி
C) 1, 3 சரி
D) 1, 2 சரி

76. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (பண்டைய தமிழகத்தில் இடைக்கற்கால பயன்பாட்டுக் கூறுகள்)
1. நுண்கற்கருவிகள் உலோகம் பற்றி அறிந்திருந்தனர்.
2. விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடினர்.
A) இரண்டும் சரி
B) 1 மட்டும் சரி
C) 2 மட்டும் சரி
D) இரண்டும் தவறு

77. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (பண்டைய தமிழகத்தில் புதியகற்கால பயன்பாட்டுக் கூறுகள்)
1. மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள்
2. நுண்கற்கருவிகள்
3. விலங்குகளை பழக்குதல்
4. பயிரிடுதல்
5. குழுக்களின் பெருக்கம்
6. வேட்டையாடுவோர் – உணவு சேகரிப்போர், மேய்ச்சல் சமூகத்தினர் என இருவிதமான குழுக்களும் ஒரே சமயத்தில் வாழ்ந்தன.
A) அனைத்தும் சரி
B) 1, 2, 4, 5, 6
C) 1, 2, 4, 6
D) 1, 2, 3, 6

78. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (பண்டைய தமிழகத்தில் இரும்புக்கால பயன்பாட்டுக் கூறுகள்)
1. பெருங்கற்கால ஈமச்சடங்கு முறை
2. உணவு சேகரிப்போரும் மேய்ச்சல் சமூகத்தினரும் ஒரே சமயத்தில் வாழ்தல்
3. குழுத் தலைவர் வாழ்தல்
4. கடல் வழி வணிகம்
5. கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள் உருவாக்குதல்
6. கைவினைத்திறன்களில் சிறப்பு நிபுணர்கள் உருவாகுதல் – குயவர்கள், கொல்லர்கள்
A) அனைத்தும் சரி
B) 1, 2, 3, 5 சரி
C) 1, 2, 3, 5, 6 சரி
D) 1, 2, 3, 4, 6 சரி

79. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (பண்டைய தமிழகத்தின் பண்டைய வரலாற்று மற்றும் சங்ககால பயன்பாட்டுக் கூறுகள்)
1. இரும்புக்கால மரபுகளோடு சேர சோழ பாண்டிய மன்னர்களின் வளர்ச்சி காணப்பட்டது.
2. வீரர்களை வழிபடுதல்
3. இலக்கிய மரபு
4. கடல்வழி வணிகம்
A) அனைத்தும் சரி
B) 1, 3, 4 சரி
C) 1, 2, 4 சரி
D) 2, 3, 4 சரி

80. கீழ்க்கண்ட எந்த இடங்களில் பழைய மற்றும் இடைக்கற்காலத் தொல்பொருள்கள் கிடைத்துள்ளன?
1. அதிரம்பாக்கம் 2. அஜந்தா
3. ஆற்காடு 4. குடியம் குகை
A) 1, 4
B) 2, 3
C) 1, 4
D) 2, 4

81. ஹோமினின் என அழைக்கப்படும் மனித மூதாதை இனத்தால் உருவாக்கப்பட்ட கற்காலக் கருவிகளிலேயே காலத்தால் முந்தைய பகுதியைச் சேர்ந்த கற்கருவிகள் ______________ல் உருவாக்கப்பட்டன.
A) ஆப்பிரிக்கா
B) கனடா
C) தமிழ்நாடு
D) குஜராத்

82. அதிரம்பாக்கத்தில் நடந்த தொல்லியல் அகழாய்வுகளும், காஸ்மிக் கதிர் ஆய்வுகளும் அங்கு _________ ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்திருப்பதை காட்டுகின்றன.
A) 2 மில்லியன்
B) 1.5 மில்லியன்
C) 2.5 மில்லியன்
D) 3 மில்லியன்

83. கொசஸ்தலையாறு பகுதிகளில் வாழ்ந்த மனித மூதாதையர்கள் ____________ என்ற வகையைச் சேர்ந்தவர்கள்.
A) நியாண்டர்தால்
B) ஹோமோ ஹெலிலிஸ்
C) ஹோமோ எரக்டஸ்
D) ஆஸ்ட்ரலோபித்திஸ்

84. ____________ ஆண்டு சர். இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் பழங்கற்காலக் கருவிகளை முதன்முறையாகக் கண்டுபிடித்தார்.
A) 1763
B) 1854
C) 1862
D) 1863

85. கீழ்ப் பழங்கற்கால கருவிகள் கீழ்க்கண்ட எந்த பகுதிகளில் காணப்படுகின்றன?

1. பல்லாவரம் 2. குடியம் குகை
3. அதிரம்பாக்கம் 4. வடமதுரை
5. எருமை வெட்டிப்பாளையம்
6. பாரிகுளம்
A) அனைத்தும்
B) 1, 2, 4, 5
C) 2, 3, 5
D) 2, 3, 4, 6

86. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. கீழ் பழங்கற்காலக் கருவிகள் வட ஆற்காடு, தர்மபுரி பகுதிகளிலும் கிடைத்துள்ளன.
2. இப்பகுதி மக்கள் செய்பொருட்களுக்கு பஸால்ட் எனும் எரிமலைப் பாறைகளை பயன்படுத்தியுள்ளனர்.
3. தமிழ்நாட்டின் தென்பகுதியிலும் இலங்கையிலும் கீழ்ப் பழங்கற்காலப் பண்பாட்டிற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

87. __________ ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் சில பகுதிகளும் தமிழ்நாடும் நிலத்தால் இணைக்கப்பட்டிருந்தன.
A) பொ.ஆ.மு. 2000
B) பொ.ஆ.மு 3000
C) பொ.ஆ.மு 4000
D) பொ.ஆ.மு 5000

88. அதிரம்பாக்கத்தின் கீழ்ப்பழங்கற்காலப் பண்பாடு ___________ ஆண்டுகளுக்கு முந்தையது என கணக்கிடப்பட்டுள்ளது.
A) 1 மில்லியன்
B) 1.5 மில்லியன்
C) 2 மில்லியன்
D) 2.5 மில்லியன்

89. பூமிக்கடியில் இருந்து வெளிப்படும் உருகிய எரிமலைக் குழம்பிலிருந்து தோன்றியவை
A) பசால்ட் பாறைகள்
B) படிவுப் பாறைகள்
C) உருமாறியப் பாறைகள்
D) இடைப்பாறைகள்

90. தமிழ்நாட்டில் இடைப் பழங்கற்கால பண்பாடு ____________ காலக்கட்டத்தில் உருவானது.
A) 3,00,000 – 2,00,000
B) 3,50,000 – 1,50,000
C) 3,85,000 – 1,72,000
D) 2,85,000 – 1,50,000

91. தமிழ்நாட்டின் இடைப்பழங்கற்காலப் பண்பாட்டின் கருவிகள் எவை?
1. கருகற்கள் 2. கற்செதில்கள்
3. சுரண்டும் கருவி 4. கத்தி
5. துளைப்பான் 6. லெவலாய்சியன் செதில்கள்
7. கைக்கோடரி 8. பிளக்கும் கருவி
A) அனைத்தும்
B) 1, 2, 4, 6, 7
C) 2, 4, 6, 7, 8
D) 2, 3, 5, 6, 8

92. இடைப் பழங்கற்கால பண்பாட்டின் சான்றுகள் தமிழ்நாட்டின் எந்த பகுதிகளில் காணப்படுகின்றன?
1. தே. புதுப்பட்டி 2. சீவரக்கோட்டை
3. தஞ்சாவூர் 4. அரியலூர்
5. காஞ்சிபுரம்
A) 1, 2, 3, 4
B) 1, 2
C) 1, 2, 4
D) 2, 3, 4

93. இடைக்கற்காலத்தின் வேட்டையாடி–உணவு சேகரிப்போர் பற்றிய சான்றுகள் கீழ்க்கண்ட எந்த பகுதிகளில் கிடைத்துள்ளன?
1. சென்னை 2. வட ஆற்காடு
3. தர்மபுரி 4. சேலம்
5. கோயம்புத்தூர் 6. அரியலூர்
7. புதுக்கோட்டை 8. மதுரை
9. சிவகங்கை 10. திருநெல்வேலி
11. கன்னியாகுமரி
A) அனைத்தும்
B) 2, 3, 5, 6, 8
C) 1, 3, 5, 6, 9
D) 2, 4, 6, 8, 11

94. கூற்று 1: தூத்துக்குடி அருகே உள்ள 'தேரி' பகுதிகளில் இடைக்கற்கால கற்கருவிகள் பல கிடைத்துள்ளன.
கூற்று 2: இப்பகுதியில் உள்ள சிவப்பு மணல் குன்றுகள் உள்ள பகுதி 'தேரி' என்று அழைக்கப்படும்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

95. தமிழ்நாட்டில் இடைக்கற்காலப் பண்பாடு குறித்த கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு.
1. இக்கால மக்கள் செர்ட், குவார்ட்ஸாலான சிறிய செதில்களையும் கருவிகளையும் பயன்படுத்தினர்.
2. இக்காலத்தின் கருவி வகைகள் சுரண்டும் கருவிகள், பிறை வடிவம், முக்கோண வடிவம் என்று பல வடிவங்களில் இருந்தன.
3. மக்கள் உயிர் வாழ விலங்குகளை வேட்டையாடினார்கள்.
4. பழங்கள், கொட்டைகள் மற்றும் கிழங்குகளைச் சேகரித்தார்கள்.

A) அனைத்தும் சரி

B) 2, 3, 4 சரி

C) 1, 3, 4 சரி

D) 1, 2, 3 சரி

96. கூற்று 1: விலங்குகளைப் பழக்கப்படுத்தி, வேளாண்மை செய்த பண்பாடு புதியகற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

கூற்று 2: வேட்டையாடுதல் புதிய கற்காலப் பண்பாட்டின் முக்கியமான தொழிலாக இருந்தது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

97. புதியகற்கால ஊர்களுக்கான சான்று தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட எந்த இடங்களில் கிடைத்துள்ளன?

1. பையம்பள்ளி – வேலூர்

2. தர்மபுரி

3. காஞ்சிபுரம்

4. சென்னை

A) 2, 3

B) 1, 3

C) 1, 2

D) 1, 4

98. புதியகற்கால பண்பாட்டின் மட்பாண்டங்களும் வேளாண்மை செய்ததற்கான சான்றும் தமிழகத்தில் முதன்முதலில் கிடைத்த இடம்

A) தர்மபுரி

B) கொடுமணல்

C) பையம்பள்ளி

D) தொப்பிக்கல்

99. கூற்று 1: புதியகற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம் இரும்புக் காலம் என்று அழைக்கப்படுகிறது.

கூற்று 2: இரும்புக்காலம் சங்ககாலத்திற்கு பிந்தைய காலம் ஆகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

100. தமிழ்நாட்டின் எந்த இடங்களில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ளன?

1. ஆதிச்சநல்லூர் – திருநெல்வேலி

2. சாணூர் – மதுராந்தகம்

3. சித்தன்னவாசல் – புதுக்கோட்டை

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 3

101. கூற்று 1: இரும்புக்கால மக்கள் இரும்பு, வெண்கலப் பொருட்களையும், தங்க அணிகலன்களையும் பயன்படுத்தினார்கள்.

கூற்று 2: இரும்புக்கால மக்கள் சங்காலான அணிகலன்களையும், செம்மணிக்கல் மற்றும் பளிங்காலான மணிகளையும் பயன்படுத்தினார்கள்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

102. கூற்று: இரும்புக் காலம், பெருங்கற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

காரணம்: இரும்புக்கால மக்கள் இறந்தவர்களைப் புதைப்பதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தினர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

D) கூற்று காரணம் இரண்டும் சரி, சரியான விளக்கமல்ல

103. சரியான இணையைக் தேர்ந்தெடு.

1. டோல்மென் – கற்திட்டை

2. சிஸ்ட் – கல்லறைகள்

3. மென்ஹீர் – நினைவுச்சின்னக் குத்துக்கல்

4. சார்க்கோபேகஸ் – ஈமத்தொட்டிகள்

A) அனைத்தும் சரி

B) 2, 3, 4 சரி

C) 1, 3 சரி

D) 1, 4 சரி

104. கொடக்கல் அல்லது குடைக்கல், தொப்பிக்கல், பத்திக்கல் ஆகிய ஈமச்சின்னங்களின் வகைகள் ____________ல் காணப்படுகின்றன.

A) தமிழ்நாடு

B) கேரளா

C) கர்நாடகா

D) ஆந்திரா

105. __________ என்பவை சுட்ட களிமண்ணாலான சவப்பெட்டி போன்றவை ஆகும்.

A) டோல்மென்

B) சிஸ்ட்

C) சார்க்கோபேகஸ்

D) மென்ஹீர்

106. கூற்று 1: அர்ன் என்பவை மட்பாண்ட சாடிகள் ஆகும்.

கூற்று 2: இவை இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

107. ___________ என்பது மண்ணில் புதைக்கப்படும் கல்லறை போன்றது.

A) டோல்மென்

B) சிஸ்ட்

C) சார்க்கோபேகஸ்

D) மென்ஹீர்

108. ஈமச்சின்னங்களுக்குள் நெல்லை வைத்துப் புதைத்ததற்கான சான்றுகள் தமிழ்நாட்டில் எங்கு கிடைத்துள்ளன?

1. ஆதிச்சநல்லூர் – திருநெல்வேலி

2. பொருந்தல் – பழனி

3. கொடுமணல் – ஈரோடு

A) அனைத்தும்

B) 1, 2

C) 1, 3

D) 2, 3

109. கூற்று 1: குடித்தலைமை முறை என்பது ஒரு படிநிலைச் சமூகம் ஆகும்.

கூற்று 2: இதில் தலைமைப் பதவி ரத்த உறவுமுறை அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

110. ____________நூற்றாண்டைச் சேர்ந்த அசோகரின் கல்வெட்டுகள் அவரது ஆட்சிப் பகுதிக்கு வெளியே தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள் இருந்ததைக் குறிப்பிடுகின்றன.

A) பொ.ஆ.மு. இரண்டு

B) பொ.ஆ.மு மூன்று

C) பொ.ஆ.மு நான்கு

D) பொ.ஆ.மு ஐந்து

111. கூற்று 1: இரும்புக்கால, சங்க கால மக்கள் கறுப்பு மற்றும் சிவப்பு நிறங்களை மட்பாண்டங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.

கூற்று 2: கறுப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் உள்ளே கறுப்பாகவும், வெளியே சிவப்பாகவும் காணப்படும். வெளிப்புறம் பளபளப்பாக இருக்கும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

112. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ___________ ஆவர்.

A) ஹோமோ ஹேபிலிஸ்

B) ஹோமோ எரக்டஸ்

C) ஹோமோ சேபியன்ஸ்

D) நியாண்டர்தால் மனிதன்

113. 1. எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.

2. வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.

3. வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.

4. வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.

A) 1 சரி

B) 1, 2 சரி

C) 1, 4 சரி

D) 2, 3 சரி

114. விவசாயம் மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்

A) பழைய கற்காலம்

B) இடைக் கற்காலம்

C) புதிய கற்காலம்

D) பெருங்கற்காலம்

115. கூற்று: தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக் கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காரணம்: நீர்ப்பாசன மேலாண்மை இடைக்கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.

A) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது

B) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்றும் காரணமும் தவறானவை

116. கூற்று: பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகர் கல்வெட்டுக் குறிப்புகள் அவரது பேரரசுக்கு வெளியே இருந்த சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.

காரணம்: தமிழகத்தைச் சேர்ந்த பழங்கால அரசர்கள் அரசியல் நோக்கில் அவர்களின் ஆட்சியை இரும்புக்காலத்தில் துவக்கினார்கள்.

A) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

B) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

C) கூற்று சரி; காரணம் தவறு

D) கூற்றும் காரணமும் தவறனாவை

117. பொருத்துக.

1. பழங்கால மானுடவியல் – i) டெரிஸ்

2. கோடரிக்கருவிகள் – ii) வீனஸ்

3. கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் – iii) அச்சூலியன்

4. செம்மணல் மேடுகள் – iv) நுண்கற்காலம்

5. சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் – v) மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு

A) ii i v iii iv

B) v iii ii i iv

C) iii i v iv ii

D) v iv iii ii i

winmeen.com

**9th Social Science Lesson 2 Questions in Tamil - வரலாறு**

**2. பண்டைய நாகரிகங்கள் - சிந்துவெளி நாகரிகம்**

1. கூற்று 1: இடைக்கற்காலத்திற்கு முன்பு தொடக்ககாலக் சமூக மக்கள் குழுக்களாகவே இருந்தன.
கூற்று 2: இந்த குழுக்கள் என்பது நாடோடிகளாக இருந்த வேட்டையாடுவோர், உணவு சேகரிப்போர் ஆவர்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

2. சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் ___________ தூரம் பரவியிருந்தது.
A) 1.3 பில்லியன் சதுர கிலோ மீட்டர்கள்
B) 1.3 பில்லியன் கிலோ மீட்டர்கள்
C) 1.3 மில்லியன் சதுர கிலோ மீட்டர்கள்
D) 1.3 மில்லியன் கிலோ மீட்டர்கள்

3. சரியான இணையைத் தேர்ந்தெடு. (ஹரப்பா நாகரிக எல்லைகள்)
1. மேற்கு – சுட்காஜென் டோர்
2. வடக்கு – ஷோர்டுகை
3. கிழக்கு – ஆலம்கீர்பூர்
4. தெற்கு – டைமாபாத்
A) அனைத்தும் சரி
B) 2, 4 சரி
C) 1, 3 சரி
D) 1, 4 சரி

4. சிந்துவெளி நாகரிகம் பரவியுள்ள முக்கிய பகுதிகள் எவை?
1. குஜராத் 2. பாகிஸ்தான் 3. மத்தியப் பிரதேசம்
4. இராஜஸ்தான் 5. ஹரியானா
A) அனைத்தும்
B) 1, 2, 3, 4
C) 1, 2, 4, 5
D) 2, 3, 4, 5

5. சரியான இணையைத் தேர்ந்தெடு.(சிந்துவெளி நாகரிகத்தின் முக்கிய நகரங்கள்)
1. ஹரப்பா – பஞ்சாப், பாகிஸ்தான்
2. மொஹஞ்சதாரோ – சிந்து, பாகிஸ்தான்
3. தோலாவிரா – குஜராத், இந்தியா
4. கலிபங்கன் – குஜராத், இந்தியா
A) அனைத்தும் சரி
B) 1, 2, 4 சரி
C) 1, 3, 4 சரி
D) 1, 2, 3 சரி

6. சரியான இணையைத் தேர்ந்தெடு.(சிந்துவெளி நாகரிகத்தின் முக்கிய நகரங்கள்)
1. லோதால் – குஜராத், இந்தியா
2. பனவாலி – ராஜஸ்தான், இந்தியா
3. ராகிகரி – பஞ்சாப், இந்தியா
4. சுர்கொடா – குஜராத், இந்தியா
A) அனைத்தும் சரி
B) 1, 2, 4 சரி
C) 1, 3, 4 சரி
D) 1, 2, 3 சரி

7. ஹரப்பா நாகரிகம் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.
A) ஹரப்பா நகரங்களில் மதில் சுவர்கள், நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகன்றன.
B) ஹரப்பர்கள் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தினார்.
C) வீடுகளில் மாடிகள் காணப்படவில்லை.
D) உள்ளாட்சி அமைப்பு ஒன்று நகரங்களின் திட்டமிடலை கட்டுப்படுத்தியது.

8. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (ஹரப்பா நாகரிகம்)
1. மொஹஞ்சதாரோவில் உள்ள மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமாகும்.
2. மொஹஞ்சதாரோவிலிருந்து கிடைத்துள்ள ஒரு சிலை "பூசாரி அரசன்" என்று அடையாளம் காட்டப்படுகிறது.
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

9. ஹரப்பா மக்கள் கீழ்க்கண்ட எந்த பயிர்களை பயிரிட்டனர்?
1. கோதுமை 2. பார்லி
3. நெல் 4. திணை வகைகள்
A) அனைத்தும்
B) 1, 2, 4
C) 2, 3, 4
D) 1, 3, 4

10. கூற்று 1: ஹரப்பா மக்களுக்கு ஆடு மாடு வளர்த்தல் பற்றி தெரிந்திருந்தது.
கூற்று 2: யானை உள்ளிட்ட பல விலங்குகள் பற்றி அறிந்திருந்தனர்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

11. ஹரப்பாவின் மாடுகள் ___________ என்று அழைக்கப்படும்.
A) கார்னிலியன்
B) ஜெபு
C) கியூனிபார்ம்

D) ஹைக்சோஸ்

12. கூற்று 1: ஹரப்பர்கள் ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள்

கூற்று 2: மட்பாண்டங்கள் ஆழமான சிவப்பு வண்ணம் பூசப்பட்டு கருப்பு நிற ஓவியங்கள் தீட்டப்பட்டவை.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

13. கூற்று 1: ஹரப்பா மக்கள் குதிரைகளைப் பயன்படுத்தினர்.

கூற்று 2: ஹரப்பா மக்கள் மட்பாண்டங்களில் சித்திரங்களை தீட்டினர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

14. சிந்துவெளி நாகரிக மக்கள் மட்பாண்டங்களில் கீழ்க்கண்ட எந்த ஓவியங்களைத் தீட்டினர்?

1. அரச மர இலை

2. மீன் செதில்

3. கிடைக்கோட்டு பட்டைகள்

4. ஒன்றையொன்று வெட்டும் வட்டங்கள்

5. குறுக்கும் நெடுக்குமான கோடுகள்

6. கணித வடிவியல் வடிவங்கள்

7. செடி, கொடிகள்

A) அனைத்தும்

B) 2, 3, 5, 6

C) 1, 2, 5, 6

D) 2, 4, 6, 7

15. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. ஹரப்பா பண்பாட்டு மக்கள் செர்ட் என்ற சிலிகா கல் வகையில் செய்த பிளேடுகள், கத்திகள், செம்புப் பொருட்கள், எலும்பாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட கருவிகள் ஆகியவற்றை பயன்படுத்தினார்கள்.

2. சிந்து சமவெளி மக்கள் இரும்பின் பயனை அறிந்திருந்தனர்.

3. கூர்மையான கருவிகள், உளிகள், ஊசிகள், மீன் தூண்டில் முட்கள், கத்திகள், நிறுவைத் தட்டுகள், முகம் பார்க்கும் கண்ணாடி, அஞ்சனம் தீட்டும் குச்சி ஆகியவை செம்பால் செய்யப்பட்டன.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 1, 3 சரி

D) 2, 3 சரி

16. கூற்று 1: செம்பில் செய்த அம்புகள், ஈட்டிகள், உளி, கோடரி ஆகிய கருவிகளை ஹரப்பா மக்கள் பயன்படுத்தினர்.

கூற்று 2: மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள நடனமாடும் பெண்ணின் சிலை, ஹரப்பா மக்களுக்கு மெழுகு அச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றி சிலை வார்க்கும் தொழில்நுட்பம் தெரிந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

17. ஹரப்பா பண்பாட்டு மக்கள் எவற்றாலான அணிகலன்களைச் செய்தனர்?

1. கார்னீலியன் 2. செம்பு

3. வெள்ளி 4. தங்கம்

A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 1, 2, 4

D) 2, 3, 4

18. ஹரப்பா மக்கள் வேலைப்பாடுகள் மிக்க ஆடை அணிகலன்களை ____________ற்கு ஏற்றுமதி செய்தனர்.

A) சீனா

B) ஜப்பான்

C) இலங்கை

D) மெசபடோமியா

19. கீழ்க்கண்ட எந்த பகுதிகளில் ஹரப்பன் முத்திரைகள் காணப்படுகின்றன?

1. ஓமன் 2. பஹ்ரைன் 3. ஈராக் 4. ஈரான்

A) அனைத்தும்

B) 1, 2, 3

C) 2, 3, 4

D) 1, 3, 4

20. கியூனிபார்ம் எழுத்துகளில் காணப்படும் __________ என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்.

A) சர்கோபகஸ்

B) ஹைக்சோஸ்

C) மெலுஹா

D) ஹைரோகிளிபிக்

21. கூற்று: ஹரப்பர்கள் முறையான எடைகளையும் அளவுகளையும் பயன்படுத்தினார்கள்.

காரணம்: வணிகப் பரிமாற்றங்களில் ஈடுபட்ட காரணத்தால் அவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட அளவுகள் தேவையாக இருந்தது.

A) கூற்று சரி காரணம் தவறு

B) கூற்று தவறு காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

D) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல

22. ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் __________ வடிவிலான செர்ட் எடைகள் கிடைத்துள்ளன.

A) வட்டம்

B) சதுரம்

C) கனசதுரம்

D) கனசெவ்வகம்

23. ஹரப்பர்களின் எடைகளின் விகிதம் எவ்வாறு அதிகரித்தன?

A) 1:2:4:8:16:32

B) 1:3:6:9:12:15

C) 1:2:4:6.8.10

D) 1:2:5:8:10:12

24. ஹரப்பன் பகுதிகளிலிருந்து சுமார் _________ எழுத்துடைய சிறு எழுத்துத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

A) 2000

B) 3000

C) 4000

D) 5000

25. ஹரப்பா பண்பாட்டுப் பகுதிகளில் கீழ்க்கண்ட எவற்றால் செய்யப்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன?

1. நுரைக்கல் 2. செம்பு 3. சுடுமண் 4. தந்தம்

A) அனைத்தும்

B) 1, 2, 4

C) 2, 3, 4

D) 1, 3, 4

26. மொகஞ்சதாரோவில் கிடைத்த 'மதகுரு அல்லது அரசன்' சிலை __________ ஆல் செய்யப்பட்டது.

A) செம்பு

B) தங்கம்

C) மாக்கல்

D) தந்தம்

27. கூற்று 1: ஹரப்பா பகுதிகளில் கிடைத்துள்ள சுடுமண்ணாலான சிறு சிலைகள், மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்கள், வெண்கலச் சிலைகள் ஆகியவை ஹரப்பர்களின் கலைத் திறமையைக் காட்டுகின்றன.

கூற்று 2: பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், பம்பரங்கள், கோலிக் குண்டுகள், பல்வேறு விளையாட்டிற்கான சுடுமண் சில்லுகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளைக் காட்டுகின்றன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

28. __________ல் நெருப்புக் குண்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

A) பானவாலி

B) சுர்கொடா

C) ராகிகரி

D) காலிபங்கன்

29. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. சிந்துவெளி மக்கள் இயற்கையை வணங்கினார்கள்.

2. அரசமரத்தை வழிபட்டனர்.

3. சில சுட்ட களிமண் சிலைகள் பெண் தெய்வத்தைக் குறிப்பது போன்று உள்ளன.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

30. தொல்லியல் ஆய்வுகள் ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு மக்கள் __________ நோக்கி இடம்பெயர்ந்ததைக் காட்டுகின்றன.

A) கிழக்கு, வடக்கு

B) கிழக்கு, மேற்கு

C) கிழக்கு, தெற்கு

D) வடக்கு, தெற்கு

31. சரியான இணையைத் தேர்ந்தெடு'

1. தொடக்க கால ஹரப்பா – பொ.ஆ.மு 3300 – 2600

2. முதிர்ந்த ஹரப்பா நாகரிகம் – பொ.ஆ.மு 2600 – 1900

3. பிந்தைய கால ஹரப்பா – பொ.ஆ.மு 1700 வரை

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

32. _________லிருந்து சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி பெறத் துவங்கியது.

A) பொ.ஆ.மு 1700

B) பொ.ஆ.மு 1800

C) பொ.ஆ.மு 1900

D) பொ.ஆ.மு 1600

33. சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் எவை?

1. பருவநிலை மாற்றம்

2. மெசபடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி

3. நதியின் வறட்சி

4. வெள்ளப்பெருக்கு

5. அந்நியர் படையெடுப்பு

A) அனைத்தும்

B) 2, 3, 5

C) 1, 3, 5

D) 2, 3, 4, 5

34. சிந்துவெளி எழுத்துக்கும் திராவிட/தமிழ் மொழிக்கும் இடையே ஒற்றுமை நிலவுவதை இனங்கண்ட ஆய்வாளர்கள்

1. அருட்தந்தை ஹென்றி ஹெராஸ்

2. அஸ்கோ பர்போலா

3. ஐராவதம் மகாதேவன்

4. ஹென்றி ஆல்பர்ட்
A) அனைத்தும்
B) 1, 2, 3
C) 2, 3, 4
D) 1, 3, 4

35. __________ காலத்தில் சிந்துவெளியின் சில கருத்துகளும் தொழில்நுட்பங்களும் தென்னிந்தியாவை அடைந்துள்ளன.
A) பழங்கற்காலம்
B) வெண்கலக் காலம்
C) இரும்புக் காலம்
D) செம்புக்காலம்

36. கீழடி, அரிக்கமேடு, உறையூர் போன்ற நகரங்கள் சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்து _________ ஆண்டுகள் கழித்து உருவானவை.
A) 600
B) 800
C) 900
D) 1200

37. சிந்துவெளி மக்கள் 'லாஸ்ட் வேக்ஸ்' முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை ___________ ஆகும்.
A) ஜாடி
B) மதகுரு அல்லது அரசன்
C) நடனமாடும் பெண்
D) பறவை

38. கூற்று: சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
காரணம்: ஹரப்பா முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால் ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.
A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்
D) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல

39. 'சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிக் குடும்பம் போன்ற வார்த்தை வரிசையைப் பெற்றுள்ளன' என்று கூறியவர்
A) யூரி நோரோசோவ்
B) அருட்தந்தை ஹென்றி ஹெராஸ்
C) ஐராவதம் மகாதேவன்
D) அஸ்கோ பர்போலா

40. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (சிந்துவெளி மக்களின் எழுத்துகள் – ஆய்வு)
A) ஹரப்பா மக்கள் எழுதும் கலையை அறிந்திருந்தனர்.
